மலேசியத் தமிழ் ஆய்விதழ்
Malaysian Journal of Tamil
eISSN: 2990-9694

# ‘பூந்தழல்’ கவிதைத் தொகுப்பில் காணப்படும் ஓகார இடைச்சொற்கள்

# Investigation of `Okaara’ Interjections in The Collection of Poems Called 'Poontazhal'

அஸ்வினி சுகுமாறன்/ Hashwinie Sukumaran[1]
[1]Undergraduate Student, Faculty of Languages and Communication, Sultan Idris Education University
Corresponding Email: sukumaranhashwinie@gmail.com

**ஆய்வுச் சுருக்கம்**

தொல்காப்பியர் சொற்களைப் பாகுப்படுத்தும் போது, சொற்கள் பெயர், வினை என்று இரண்டு வகைப்படும் என்று கூறி, உரியும், இடையும் அவற்றைச் சார்ந்துவரும் என்று குறிப்பிட்டுள்ளார். இடைச்சொற்கள் சொல்நிலை பெறுவதில் இடைப்பட்ட இயல்பு கொண்டவை. இதனால் இவை இடைச்சொற்கள் எனப்படுகின்றன. இடைச்சொற்களில், ஓகார இடைச்சொல் ஒரு வகையாகும். இந்த ஆய்வு, ஆவலன் என்ற கவிஞர் மு. ஆசைத்தம்பி இயற்றிய ‘பூந்தழல்’ கவிதைத் தொகுப்பில் காணப்படும் ஓகார இடைச்சொற்களை அடையாளங்கண்டு அவற்றைப் பகுப்பதாகும். இவ்வாய்விற்கான தரவுகள் யாவும் நூலக ஆய்வின் வழி பெறப்பட்டதாகும். ஓகார இடைச்சொற்களை ஆராய ‘பூந்தழல்’ கவிதைத் தொகுப்பிலிருந்து கவிதைகள் பயன்படுத்தப்பட்டுள்ளன. ஓகார இடைச்சொற்கள் மொத்தம் 6 வகையாகப் பிரிக்கப்பட்டுள்ள நிலையில், அவை எவ்வாறு கவிதைகளில் பயன்படுத்தப்பட்டுள்ளன என்பதைத் தெளிவாக இவ்வாய்வு விளக்குகின்றது.

**கருச்சொற்கள்:** தொல்காப்பியம், பூந்தழல் கவிதைத் தொகுப்பு, ஓகார இடைச்சொற்கள்

**Abstract**

While classifying words, Tolkappiyar said that words are divided into two categories namely noun and verb and mentioned that ‘Uri’ and ‘Idai’ are dependent on them. Interjections are intermediate in nature in acquiring vocabulary. Hence, these are called interjections. Among interjections, ‘Okaara’ interjection is one type. This study is to identify and analyze the ‘Okaara’ interjections found in the collection of poems 'Poontazhal' composed by the poet M. Asaithambi named Avalan. All data for this study was obtained through library research. Poems from the poetry collection 'Poontzhal' have been used to explore ‘Okaara’ interjections. This review clearly explains how the intersyllabic interjections are divided into 6 types in total in the poems.

**Keywords:** Tolkappiyam, Poontzhal, ‘Okaara’ interjections

**முன்னுரை**

இலக்கிய வடிவங்களில் நீடித்த புகழையும், நிரந்தரப் பெருமையையும் பெற்றிருப்பது கவிதை. மொழியில் உள்ள ஒலியன் அழகியல், ஒலிக் குறியீடுகள், சந்தம் ஆகியவற்றுடன் இடம், இயல்பான பொருள் ஆகியவற்றை வெளிப்படையாகக் காட்டுவதாகக் கவிதை உள்ளது. கவிதைகள் மனத்தில் இருக்கும் உணர்வுகளை வெளிக்கொணர பெரும் உறுதுணையாக இருக்கின்றது என்றால் அது மிகையாகாது. அவ்வகையில், 'பூந்தழல்' கவிதைத் தொகுப்பு மலேசியாவில் மரபு கவிதைக்குப் பெரும் விருந்தாக அமைந்தது. இக்கவிதைத் தொகுப்பு கவிஞர் மு. ஆசைத்தம்பி என்ற ஆவலன் அவர்களின் கைவண்ணத்தில் உருவாகியது. இவர் எண்பதாம் ஆண்டு முதல் ஈராயிரத்தாம் ஆண்டு வரையில் வெளிவந்த நாளிதள்களில் இவர் எழுதிவந்த பல்வகை பாக்களைச் சேகரித்து வைத்திருந்தார். இவர் இலக்கிய அறிவை அதிகம் கொண்டுள்ள ஒரு கவிஞர். இவரின் சொற்புலமையே இக்கவிதைகளுக்கு முதுகெலும்பாக அமைகின்றது. இத்தொகுப்பில் உள்ள ஒரு சில கவிதைகளில் கவிஞரின் சினம், உணர்ச்சியின் வெளிப்பாடாக மிளிர்கின்றது. 'தாய்நிக ராமெனது தாய்த்தமிழை நேசிக்கும் சேய்நிக ரானவன்' என்று தொடங்கும் இவரின் முதல் கவிதை இவர் தமிழ்மொழியின் பால் கொண்ட பற்றை உணர்த்துகிறது. இவரின் கைவண்ணத்தில் உருவாகிய 'பூந்தழல்' கவிதைத் தொகுப்பானது 163 கவிதைகளின் தொகுப்பாக அமைகின்றது. இந்நூல் முப்பால் மரபின் உயிர்ப்பினைக் கொண்டதாகவும், அதோடு அனைவருக்கும் ஏற்ற நாகரிகமுள்ள நூலாகவும் விளங்குகிறது. மொழி, குமுகாயம், காதல், இயற்கை, வாழ்த்து, இரங்கல் எனப் பலத்தரப்பட்ட துறை சார்ந்த கவிதைகளை இந்நூல் கொண்டுள்ளது. இந்நூலில் காணப்படும் கவிதைகள் யாவும் சமுதாயத்திற்குத் தேவையான சிந்தனைகளையுடையவையாகும். இடைச்சொல் என்பது பெயர்ச்சொல்லுக்கும் வினைச்சொல்லுக்கும் இடையில் நின்று பொருளை விளக்கும் சொல் ஆகும். இதைத் தொல்காப்பியர்,

'இடையெனப் படுப பெயரொடும் வினையொடும்

நடைபெற்று இயலும் தமக்கு இயல்பு இலவே'

(தொல்.சொல்.251)

என்று குறிப்பிடுகின்றார். அதாவது, இடைச்சொற்கள் பெயர், வினை என்னும் இரண்டு வகைச் சொற்களுக்கும் முன்னாலும் பின்னாலும் இணைந்து நின்று அப்பெயர், வினைகளின் பொருளை தெளிவுபடுத்தும். பெரும்பாலும் இவ்வகைச் சொற்களானது இருசொற்களுக்கு இடையே வருவதால் இவை இடைச்சொல் என்று அழைக்கப்படுகிறது. ஓகார இடைச்சொல்லைத் தொல்காப்பியர் சிறப்பாக இரண்டு வரிகளில் விளக்கியுள்ளார். தொல்காப்பியர்,

'ஒழியிசை வினுச்சிறப் பெதிர்மறை தெரிநிலை

கழிவிசை நிலைபிரிப் பெனவேட் டோவே'

என்று விளக்குகிறார். அதாவது, ஓகார இடைச்சொற்கள் ஒழியிசை, வினா, சிறப்பு, எதிர்மறை, தெரிநிலை, பிரிநிலை ஆகியவற்றை உள்ளடக்கியுள்ளன என்பதைத் தொல்காப்பியர் உணர்த்துகிறார்.

**தரவுப் பகுப்பாய்வு**

'பூந்தழல்' எனும் கவிதைத் தொகுப்பில் பல ஓகார இடைச்சொற்கள் உள்ளன. கவிதைகளை இடைச்சொற்கள் மேலும் சிறப்பித்துக் காட்டவும் அவற்றிற்கு மேலும் அழகைச் சேர்க்கவும் உதவுகின்றது என்றால் அது மிகையாகாது. பூந்தழல் எனும் கவிதைத் தொகுப்பு நூலின் மூலம் 6 வகையான ஓகார இடைச்சொற்கள் கண்டறியப்பட்டுள்ளன. இவ்வாய்வின் வழி பூந்தழல் கவிதைத் தொகுப்பின் மூலம் கிடைக்கப்பெற்ற காட்டுகள் பின்வருமாறு:

**1. ஒழியிசை ஓகாரம்**

ஒழியிசை என்பது கூறு செய்தியை ஒழித்து மற்றொன்றை உணர்த்துவது.

*எடுத்துக்காட்டு 1:*

இவ்வரியானது 'தமிழைக் கொழுத்தினர்' எனும் கவிதையிலிருந்து எடுக்கப்பட்ட வரியாகும். இவ்வரி பல பெருமைகளை கொண்ட தமிழ்மொழியை நெருப்பிடுதல் சரியா என்ற கருத்தை முன்வைக்கிறது. சொல்ல வரும் கருத்தை நேரடியாகக் கூறாமல் மறைமுகமாகக் கூறிய சிறப்பு கவிஞரையே சாரும்.

*எடுத்துக்காட்டு 2:*

மேற்கண்ட வரி 'யானை படுகொலை' எனும் கவிதையிலிருந்து எடுக்கப்பட்டதாகும். இவ்வரியானது, வாயில்லா சீவன்களான யானைகளைக் கொள்ளும் தீயவர்களை யாரும் தண்டிக்க மாட்டார்களா என்ற கருத்தைத் தெரியப்படுத்துகின்றது. இக்கருத்து நேரடியாகக் கூறாமல் மறைமுகமாகக் கூறப்படுவதால் இஃது ஒழியிசையாகும்.

**2. பிரிநிலை ஓகாரம்**

சிலவற்றிலிரிந்து ஒன்றைப் பிரித்துக்காட்டுவதே பிரிநிலை ஆகும்.

*எடுத்துக்காட்டு 1:*

இவ்வரியானது 'தமிழைக் கொளுத்தினர்' எனும் கவிதையிலிருந்து எடுக்கப்பட்டதாகும். இதில் கல்வி கற்றவர்களை மட்டும் பிரித்துக் காட்டி ஓர் எடுத்துக்காட்டாக அமைக்கப்பட்டுள்ளதால் இது பிரிநிலை ஓகாரமாகக் கருதப்படுகின்றது.

*எடுத்துக்காட்டு 2:*

இவ்வரியானது 'தமிழைக் கொளுத்தினர்' எனும் கவிதையிலிருந்து எடுக்கப்பட்டதாகும். இதில் தமிழர்களின் நலனில் பெரும் பங்கு வகிக்கும் நாளிதழ்களைக் கொளுத்துவது படித்தவர்களின் அதாவது கல்வி கற்றவர்களின் செயலா என்றும் அஃது ஆண்களுக்குப் பொருத்தமான விடயமா என்றும் கேட்கப்படுகின்றது.

3. **சிறப்பு ஓகாரம்**

ஒன்றைச் சிறப்பித்து உயர்த்தும் பொருள்தருவதே சிறப்பு ஓகாரமாகும். இது இரண்டு வகைகளாகப் பிரிக்கப்பட்டுள்ளது. அவை உயர்வும் இழிவும் ஆகும்.

- **உயர்வு**
  ஒன்றைப் பற்றி உயர்த்தி, மிகைப்படுத்திக் கூறுவதே உயர்வாகும்.

*எடுத்துக்காட்டு 1:*

இவ்வரியானது 'பஞ்சாபி உடை' எனும் கவிதையிலுள்ள வரியாகும். இவ்வரியானது பெண்கள் சேலை உடுத்தி நடந்து வரும்பொழுது அன்னநடை பழகும் செயலுக்கு ஈடு உண்டா என்பதை வினவுகிறார் கவிஞர். இதில், பஞ்சாபி உடையை விட சேலைக்குத் தனி அழகும், ஸ்பரிசமும் உண்டு என்ற கருத்துத் தென்படுகின்றது.

*எடுத்துக்காட்டு 2:*

இவ்வரியும் 'பஞ்சாபி உடை' எனும் கவிதையிலிருந்து எடுக்கப்பட்ட வரியாகும். இவ்வரி சேலைக் கட்டி வரும் ஒரு பெண்ணின் முன்னழகையும் பின்னழகையும் சித்தரித்துக் காட்டும் வகையில் அமைந்துள்ளது. இதில், பெண்கள் சேலைக் கட்டி வருவதினால் அவர்களின் அழகு மேலும் மிளிர்வதை விவரித்துள்ளது.

- **இழிவு**

  ஒன்றைப் பற்றி மறைமுகமாகவோ நேரடியாகவோ குறைக்கூறுதலே இழிவாகும்.

*எடுத்துக்காட்டு 1:*

மேற்கண்ட வரியானது சேலை எனும் கவிதையிலிருந்து எடுக்கப்பட்டதாகும். இவ்வரி, பெண்கள் சேலைக் கட்டி தங்களின் அழகைக் காட்டுவது தவறில்லை, அதே நேரத்தில் மற்றவரின் வாய்ப்பேச்சுக்கு ஆளாவது சரியில்லை என்ற கருத்தை முன்வைக்கிறது. பெண்கள் சேலைக் கட்டி அவர்களின் அழகைக் காடும் விதம் தவறு என்பதை விளக்குவதன் மூலம் இது சிறப்பு ஓகாரத்தில் இழிவு என்று கருதப்படுகின்றது.

*எடுத்துக்காட்டு 2:*

மேற்காணும் வரி ' சேலை' எனும் கவிதையிலிருந்து எடுக்கப்பட்டதாகும். இவ்வரி பெண்கள் சேலையை அரைகுறையாகக் கட்டுவது மட்டுமின்றித் தங்களின் அந்தரங்க பாகங்களை அழகு என்ற பெயரில் வெளிக்கொணர்வது தமிழ் மரபில் இல்லா ஒன்றாகும் என்பதை விளக்குகின்றது. இதில், பெண்கள் சேலை கட்டும் விதம் சரியில்லை என்று கூறப்படுவதால் இஃது சிறப்பு ஓகாரத்தில் இழிவாகும்.

**4. வினா ஓகாரம்**

இது தான்சேரும் சொல்லை வினாவாக மாற்றும் தன்மையுடையதாகும்.

*எடுத்துக்காட்டு 1:*

மேற்காணும் வரியானது 'காடு' எனும் கவிதையிலிருந்து எடுக்கப்பட்ட வரியாகும். இவ்வரி இறைவனால் அமைக்கப்பட்ட இயற்கையின் விதியை மாற்றும் மனிதனின் செயல்பாடுகள் யாவையும் இறைவனால் தட்டிக் கேட்கப்படாதா அதோடு சட்டமும் எந்த நடவடிக்கையும் எடுக்காதா என்பதை விவரிக்கின்றது. இவ்வரியானது இக்கவிதையை வாசிக்கும் வாசகர்களுக்கு ஒரு கேள்வியாக அமைவதால் இது வினா ஓகாரமாகும்.

*எடுத்துக்காட்டு 2:*

மேற்கண்ட வரியானது 'உரிமையினைப் பறிக்காதீர்' எனும் கவிதையிலிருந்து எடுக்கப்பட்டதாகும். இவ்வரியானது தவறு, குற்றம் என தெரிந்தும் பலர் செய்யும் காரியங்களை கல்வி கற்ற அறிவுடையவர்கள் கண்டுக்கொள்ளாதது ஏன் என்பது கவிஞரின் ஐயம்மாக அமைகின்றது. இவ்வரி கவிஞரின் கேள்வியாக அமைவதால் இது வினா ஓகாரம் என வெளிப்படுகின்றது.

**5. எதிர்மறை ஓகாரம்**

கூறியதற்கு எதிர்மறையான பொருளை உணர்த்துவதே எதிர்மறை ஓகாரம்.

*எடுத்துக்காட்டு 1:*

மேற்காணும் வரி ‘உரிமையினைப் பறிக்காதீர்’ என்ற கவிதையிலிருந்து எடுக்கப்பட்டதாகும். அதாவது, பல மொழிகளுக்குத் தாயாக விளங்கும் தமிழ்மொழிக்கு ஓர் இழுக்கு நேர்ந்தால் தமிழர்கள் யாவரும் பொறுத்துக் கொள்வோமா என்று இவ்வரி உணர்த்துகிறது. தமிழுக்குத் தீங்கு ஏற்பட்டால் தமிழர்கள் ஆகிய நாம் பொறுக்க மாட்டோம் என்பதை உணர்த்துவதால் இஃது எதிர்மறை ஓகாரம் ஆகும்.

*எடுத்துக்காட்டு 2:*

மேற்காணும் வரியானது ‘ஒன்றுபட்டார்க்கே உயர்வு’ என்ற கவிதையிலிருந்து எடுக்கப்பட்ட வரியாகும். அதாவது, காலம் காலமாக ஒற்றுமையாக வாழ்வதை நம் பண்பாடாக வைத்திருந்த நிலையில் இன்று அந்நிலை முற்றிலுமாக மாறி இன்று ஒற்றுமையின்றி வாழ்கின்றோம். இவ்வரி நாம் அனைவரும் ஒற்றுமையாக இருக்க வேண்டும் என்று காலம் காலமாகப் பின்பற்றி வரும் ஒற்றுமை மனப்பான்மையை நாம் கொண்டிருக்க வேண்டும் என்பதை விளக்குவதால் இஃது எதிர்மறை ஓகாரம் ஆகும்.

**6. தெரிநிலை ஓகாரம்**

தெரிநிலை என்பது ஒன்றைத் தெரிந்து பிரித்துரைப்பதைக் குறிப்பதே ஆகும்.

*எடுத்துக்காட்டு 1:*

மேற்காணும் வரிகள் ‘சீர்கேடு போதுமடா!’ என்ற கவிதையிலிருந்து எடுக்கப்பட்டவையாகும். இவ்வரியில், வாள்களைக் கொண்டு சண்டையிட்டு, வன்முறையில் ஈடுப்பட்டு பின்னர் மாண்டு போவது வீரமில்லை என்றும் இத்தகைய செயல் வீரமுள்ள ஒருவனுக்கு உரித்தான செயலில்லை என்றும் இவ்வரிகள் நேரடியாகக் கருத்தை பதிவு செய்வதால் இது தெரிநிலை ஓகாரமாகக் கருதப்படுகின்றது.

*எடுத்துக்காட்டு 2:*

மேற்கண்டவை ‘சேலை’ எனும் கவிதையின் மூலம் கிடைக்கப்பெற்ற வரிகளாகும். இவ்வரிகள் கூறவரும் கருத்து என்னவென்றால் சிறிதும் கூச்சமில்லாமல் சேலை கட்டுவதினால் வரும் அழகு என்ற பெயரில் தங்களின் உடல்களைக் காட்டி திடமான

மனத்தோடு இருக்கும் ஆண்களை மயப்பதுவோ என்பதே ஆகும். அதாவது, பெண்கள் சேலை அணிந்து ஆண்களைத் திண்டாடச் செய்வது சரியில்லை என்பதை நேரடிப் பொருளாக எடுத்துவைக்கிறது இவ்வரிகள்.

**நிறைவுரை**

இறுதியாக, இந்த ஆய்வில் மொத்தம் 6 வகையான ஓகார இடைசொற்கள் கண்டுப்பிடிக்கப்பட்டுள்ளன. அதிலும் முக்கியமாக, பிரிநிலை ஓகார இடைச்சொற்கள் மற்றும் சிறப்பு ஓகார இடைச்சொற்கள் ஆகிய வகைகளுக்கு நிறைய எடுத்துக்காட்டுகள் கண்டுப்பிடிக்கப்பட்டுள்ளன. ஆகவே, ஓகார இடைச்சொற்கள் இது போன்ற கவிதைகளுக்குப் பெரும் உறுதுணையாக இருப்பதோடு அக்கவிதைகளை மேலும் உயிர்ப்பிக்கின்றன.

**துணைநூற்பட்டியல்**

செ. சீனி நைனா முகம்மது. 2013, நல்ல தமிழ் இலக்கணம், ஓகார இடைச்சொல், பக்கம் 114 – 116, செலாங்கூர்.

மு. ஆசைத்தம்பி. 2021, பூந்தழல், கோலாலம்பூர்.